## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 5167/2018/ எம்.சி. 8 )** |
| **நாள்** | - | **08.06.2018 பிற்பகல் 4.00 மணி** |
| **தலைமை** | - | **டாக்டர் க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

### பொருள் எண் 1

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. தி. ரா. ரவி, உதவி ஆணையாளர், தெற்கு மண்டலம் – 30.06.2018 அன்று வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறுவது – 01.07.2018 முதல் 30.06.2019 முடிய ஓராண்டு காலம் உதவி ஆணையாளர் பணியிடத்தில் பணி நீட்டிப்பு செய்ய அரசிற்கு செயற் குறிப்பு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

**பார்வை** அரசாணை எண். 682 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 23.11.2015.

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வரும் திரு. தி.ரா.ரவி அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 30.06.2018 அன்று பணி ஓய்வு பெறவுள்ளார்.

திரு. தி.ரா.ரவி அவர்கள் கடந்த 30.04.1984 அன்று இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து அதன் பின்னர் உதவியாளர், கண்காணிப்பாளர், நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் ஆகிய பதவிகளில் கடந்த 31 ஆண்டுகளுக்கும் மேலாக திறம்பட பணியாற்றியுள்ளார். உதவி ஆணையாளர் கூடுதல் பொறுப்பாக தெற்கு மண்டலத்தில் 10.01.2013 முதல் 23.07.2013 முடியவும், மத்திய மண்டலத்தில் 24.07.2013 முதல் 31.12.2014 முடியவும் மீண்டும் தெற்கு மண்டலத்தில் 01.01.2015 முதல் 22.11.2015 முடியவும் பணியாற்றி உள்ளார்.

பார்வை 1ல் காணும் அரசாணையின்படி உதவி ஆணையாளர் (வார்டு) ஆக பதவி உயர்வு செய்யப்பட்டு கடந்த 23.11.2015 முற்பகல் முதல் இம்மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

திரு.தி.ரா. ரவி, உதவி ஆணையாளர் அவர்களின் பணி செயல்பாடுகள் பின்வருமாறு:

- சொத்து வரி வசூலில் தெற்கு மண்டலத்தில் 2013–14ல் 85%ம், மத்திய மண்டலத்தில் 2014–15ல் 94%ம், தெற்கு மண்டலத்தில் 2015–16ல் 89%ம், 2016–17 ல் 89%ம் மற்றும் 2017–18ல் 90%ம் வரி வசூல் செய்து திறம்பட செயலாற்றி மாநகராட்சிக்கு அதிக வருவாய் ஈட்டியமைக்காக பாராட்டுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

- இம்மாநகராட்சிக்கான உள்ளாட்சி தேர்தல்கள் மற்றும் சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்கள் ஆகியவற்றில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலராகவும் மற்றும் பல்வேறு தேர்தல் பணிகளிலும் சிறப்பாக பணியாற்றி உள்ளார்.

- தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வார்டு மறுவரை பணிகளில் இரவு, பகல் பாராமல் திறம்பட பணியாற்றி, இது தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை மனுக்களையும் முறையாக தீர்வு செய்து, எவ்வித குறைபாடுகளும் இன்றி இப்பணியினை சிறப்பாக முடித்துள்ளார்.

- கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக இம்மாநகராட்சியின் வரவு செலவுத் திட்ட அறிக்கையினை தயார் செய்து மாமன்றத்தில் சமர்ப்பிக்கும் பணியில் மிகவும் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.

- தெற்கு மண்டலத்திற்குட்ட 20 வார்டு பகுதிகளிலும் பொது சுகாதாரத்தை பேணிக்காப்பதில் சிறப்பாக செயல்பட்டு உள்ளார்.

- தெற்கு மண்டலத்தின் ஆண்டுக்கணக்குகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து மைய அலுவலகத்திற்கு சமர்ப்பித்து கணக்குகளை முடிக்க உறுதுணையாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக தெற்கு மற்றும் மத்திய மண்டலத்தில் பணிபுரிந்த காலத்தில் சுமார் 2000க்கும் மேற்பட்ட தணிக்கைத் தடைப்பத்திகளுக்கு பதில் வழங்கி தடைகளை நிவர்த்தி செய்து தணிக்கைத்தடையினால் பணியாளர்களின் ஓய்வூதியம் பாதிக்கப்படாத வகையில் பெரும்பான்மையான பணியாளர்கள் ஓய்வூதியத்தினை உரிய காலத்தில் பெறுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக தெற்கு மற்றும் மத்திய மண்டலத்தில் பணிபுரிந்த காலத்தில் வரி இல்லா இனங்கள் மீது தனி கவனம் செலுத்தி மாநகராட்சிக்கு இதன்மூலம் அதிக வருவாய் ஈட்ட உறுதுணையாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் பொது மக்களிடமிருந்து பெறப்படும் சொத்துவரி, காலியிடவரி, புதிய குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் பொது மக்களுக்குரிய சேவை தொடர்பான அனைத்து விண்ணப்பங்களின் மீதும் தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து மாநகராட்சிக்கு பொதுமக்களிடம் நற்பெயர் ஏற்பட காரணமாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் அனுமதியின்றி கட்டப்படும் குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களை கண்டறிந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையில் கட்டப்படும் கட்டிடங்களின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த பொது ஒதுக்கீட்டு இடங்களை கண்டறிந்து அவற்றை மாநகராட்சி வசம் பொறுப்பேற்று மாநகராட்சி சொத்துக்களை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பாதுகாத்துள்ளார்.

- தற்போது தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் 650க்கும் மேற்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அதற்குரிய விண்ணப்பங்களை பெற்று வரன்முறைபடுத்தியதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், பொதுமக்களுக்கு அவர்களுக்குரிய மனையினை வரன்முறைப்படுத்தவும் உறுதுணையாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் தீவிர கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் அனைத்து பகுதிகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்தி நில வேம்பு கசாயம் மற்றும் பப்பாளிச்சாறு வழங்கி பொதுமக்களின் சுகாதாரம் மேம்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் பருவ மழைக் காலங்களில் பொதுமக்களுக்கு எவ்வித அசம்பாவிதங்களும், இடையூறும் ஏற்படாமல் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் தமிழ்நாடு அரசின் முன்மாதிரி திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தில் தீவிர ஈடுபாட்டுடன் செயல்பட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைப்பதற்கும் அரசிற்கும் மாநகராட்சிக்கும் உறுதுணையாக இருந்துள்ளார்.

- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள், மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்கள், மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளரிடமிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்களின் மீது தனிக் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் களையும் வகையில் சிறப்பாக செயல்பட்டுள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் பொதுமக்களுக்கு தேவையான சாலைகள், பாதாள சாக்கடை, தெருவிளக்குகள், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாக மேற்கொள்ள சிறப்பாக செயல்பட்டுள்ளார்.

- இம்மாநகராட்சியின் அனைத்து நிர்வாகப் பணிகளிலும் ஆணையாளர் மற்றும் உயர் அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி மாநகராட்சிக்கு எந்தவிதமான அவப்பெயரும் ஏற்படா வண்ணம் செயல்பட்டுள்ளார்.

இம்மாநகராட்சியில் **34** ஆண்டுகள் இவரது சிறப்பான பணி அனுபவத்தினை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்ட பணிகளில் இவரது அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையிலும், தெற்கு மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளில் முழு ஈடுபாட்டுடன் இவர் செயல்பட்டு வருவதாலும் இம்மாநகராட்சிக்கு இவரது பணி அவசியம் தேவைப்படுவதாலும் சிறப்பினமாக கருதி இவருக்கு **01.07.2018** முதல் **30.06.2019** முடிய ஓராண்டு காலத்திற்கு உதவி ஆணையாளர் பணியிடத்தில் பணி நீட்டிப்பு வழங்க அரசிற்கு செயற் குறிப்பு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம் (ந.க.எண்.**329/2018**/எம்.சி.2)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 141 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வா/டு எண்.80-ல் தியாகிகுமரன் வீதி மாநகராட்சி வணிக வளாகம் - தரை தளத்தில் உள்ள கடை எண்3-யை. தி/ள்.சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி நடத்தும் நியாயவிலைக்கடை எண்.36/45-க்கு ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக

பார்வை
1) இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி அவர்களின் கடித எண்.பண்டகம்/ பொ.வி.தி./நி.வி.கடை வாடகை/2017-2018 நாள்.08.09.2017 மற்றும் 19.09.2017.
2) இவ்வலுவலக கடித எண்.5316/2017/அ2(ம) நாள்.28.09.2017
3) இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி அவர்களின் சம்மத கடித எண்.பண்டகம்/ பொ.வி.தி./ நி.வி.கடைவாடகை/2017-2018 நாள்.06.10.2017
4) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி நாள்.18.11.2017.

-------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.80-ல் தியாகிகுமரன் வீதியிலுள்ள மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.3 இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி நடத்தும் நியாயவிலைக்கடை எண்.36/45-க்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரியுள்ளார்கள்.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | மொத்த கடைகள் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | கடை ஒன்றிக்கு மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.80-ல் தியாகி குமரன் வீதியில் மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் உள்ள கடை எண்.3 | 1 | 112.125 | 11,998/- |

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் மேற்படி கடைகளுக்கு மாத வாடகை ரூ.11,998/- செலுத்த சம்மதக் கடிதம் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 3-ல் காணும் கடிதத்தில் இணைப்பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி நடத்தும் நியாயவிலைக்கடை எண்.36/45-க்கு மாத வாடகை ரூ.11,998/- அடிப்படையில் நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்து தருமாறு சம்மத கடிதம் வழங்கியுள்ளாாகள்.

எனவே சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி நடத்தும் நியாயவிலைக்கடை எண்.36/45-க்கு வார்டு எண்.80-ல் தியாகிகுமரன் வீதி மாநகராட்சி வணிக வளாகத்தில் தரை தளத்தில் கடை எண்.3-யை மாத வாடகை ரூ.11,998/- நிர்ணயம் செய்ய அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும் பார்வை (4)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்யப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்..5316/2017/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 142 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் – 06.03.2018 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று 2018-2021-ம் ஆண்டிற்கு ஒப்படை செய்வது – தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.12.03.2018.

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 06.03.2018–ம் தேதி 2018-2021-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2018-2021-ம் ஆண்டிற்கு 06.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.72-ல் வ.உ.சி பூங்கா அருகில் தரைத்தளத்தில் (160சதுரடி) கடை எண்.5 அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.33,400/- | திரு.ரா.வசந்த கிருஷ்ணன் | ரூ.33750/- (ஒப்பந்தப்புள்ளி) |

06.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.5-க்கு திரு.ரா.வசந்த கிருஷ்ணன் அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1243/18/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 143 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2018-2021-ம் ஆண்டிற்கு - மாநகராட்சி வணிக வளாக கடைகள் – 20.03.2018 அன்று இரண்டாம் முறையாக நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று 2018-2021-ம் ஆண்டிற்கு – ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.22.03.2018.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 20.03.2018–ம் தேதி 2018-2021-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரண்டாம் முறை நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2018-2021-ம் ஆண்டிற்கு 20.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.50-ல் ராஜு ரோடு(மேற்கு பகுதியில் முதல் தளத்தில் கடை எண்.5 (161.46சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.4,594/ | திரு.அ.முனவர் | ரூ.4,750/- (ஒப்பந்தப்புள்ளி) |

20.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.5-க்கு திரு.அ.முனவர் அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1243/18/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 144 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2018-2021-ம் ஆண்டிற்கு - மாநகராட்சி வணிக வளாக கடைகள் – 20.03.2018 அன்று இரண்டாம் முறையாக நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த பட்ச ஏலக்கோரிக்கையை ஏற்று 2018-2021-ம் ஆண்டிற்கு – ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.22.03.2018.

---------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 20.03.2018–ம் தேதி 2018-2021-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரண்டாம் முறை நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2018-2021-ம் ஆண்டிற்கு 20.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.52சத்திரோடு புல் மார்கெட் மாநகராட்சி வணிக வளாக கடைகள். கடை எண்.6 (110 சதுரடி)<br>அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.6,250/ | M/S.Triplex Dry Clearners | ரூ.6,400/-<br>(மின் ஏலம் ) |

20.03.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.6-க்கு M/S.Triplex Dry Clearners அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.1243/18/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 145 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண்.82 – உக்கடம் பேருந்து நிலையத்தில் திரு. S.K.தமீம் அவரது கடையினை மாநகராட்சியால் அகற்றப்பட்டதற்கு பதிலாக திருமதி நபீசா அவர்களுக்கு பெட்டி கடை ஒதுக்கீடு செய்தல் - தொடர்பாக

பார்வை
1. மாவட்ட நீதி மன்ற வழக்கு உத்திரவு எண்.O.S.NO.663/11 நாள்.25.06.2012
2. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.16.06.2017
3. இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.24.10.2016
4. மாமன்ற தீர்மான எண்.436 நாள்.23.02.2017.
5. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.06.04.2017
6. காவல் நிலைய தடையின்மை சான்று நாள்.16.06.2017
7. AEE( P)C அவர்களின் குறிப்பு நாள்.17.06.2017
8. ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி நாள்.10.07.2017

--------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.82 உக்கடம் பேருந்து நிலையத்தில் திரு. S.K.தமீம் அவரது கடையினை மாநகராட்சியால் அகற்றப்பட்டதற்கு பதிலாக திருமதி .நபீசா அவர்களுக்கு அதே இடத்தில் மீண்டும் நடத்த அனுமதி வேண்டி தொடர்ந்த வழக்கு எண். எண்.O.S.NO.663/11 நிலுவையில் உள்ளதால் மாற்று இடத்தினை தேர்வு செய்ய தெரிவிக்கப்பட்டதில். நீதி மன்ற காம்பவுண்ட் அருகில் (பழமுதர் சோலை எதிர்புறம் 10x8 சதுரடி இடத்தினை தற்காலிகமாக வழங்க இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு பெற்று மாத வாடகை ரூ.6532/- என நிர்ணயம் செய்து பார்வையில் (4)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி அனுமதி வழங்கப்பட்டது.

கோயம்புத்தூர் நீதி மன்ற காம்பவுண்ட் அருகில் (பழமுதிர் சோலை எதிர்புறம்) பெட்டி கடை வைக்க அனுமதி மறுக்கப்பட்டதால் பார்வை (5)-ல் ஆணையாளர் அவர்களின் உத்திரவு படி பார்வை (6)-ல் உக்கடம் பேருந்து நிலையத்திற்கு பெட்டி வைக்க காவல் நிலைய தடையின்மை சான்ற பெற்று பார்வை (7)-ல் AEE( P)C அவர்களின் குறிப்பு பெற்று உக்கடம் பேருந்து நிலையத்தில் 10x8 சதுரடி மாத வாடகை ரூ.6,532/- என காலி இடத்திற்கு நிர்ணயம் செய்து பார்வை (8)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க. எண்.3640/2017/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 146 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2017-2020-ம் ஆண்டிற்கு - மாநகராட்சி வணிக வளாக கடைகள் – 04.01.2018 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.23.02.2018.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 04.01.2018–ம் தேதி 2017-2020-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2017-2020-ம் ஆண்டிற்கு 04.01.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.வி.க. மார்க்கெட் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.12 (60.75 சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.2,780/- | திரு.C.B.செந்தில்குமார் | ரூ.2500/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.N.மணிவண்ணன் | ரூ.2800/- (ஒப்பந்தப்புள்ளி) |

04.01.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.12-க்கு திரு.N.மணிவண்ணன் அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.345/17/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 147 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2017-2020-ம் ஆண்டிற்கு - மாநகராட்சி வணிக வளாக கடைகள் – 04.01.2018 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.23.02.2018.

------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைக்கு 04.01.2018–ம் தேதி 2017-2020-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

| வ. எண் | இனம் | ஏலதாரர் பெயர் | 2017-2020-ம் ஆண்டிற்கு 04.01.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.83-ல் முத்து விநாயகர் கோவில் ரோடு வணிகவளாக கடைகள். கடை எண்.4( 120 சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.8395/- | திரு.M.ராஜேஷ்குமார் | ரூ.8900/- (ஒப்பந்தப்புள்ளி) |

04.01.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.4-க்கு திரு.M.ராஜேஷ்குமார் அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.345/17/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 148 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் -2017-2020-ம் ஆண்டிற்கு - மாநகராட்சி வணிக வளாக கடைகளுக்கு 04.01.2018 அன்று நடைபெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏலக்கோரிக்கை ஏற்று ஒப்படை செய்வது - தொடர்பாக.

பார்வை ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள்.23.02.2018.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட கீழ்காணும் மாதவாடகை கடைகளுக்கு 04.01.2018–ம் தேதி 2017-2020-ம் ஆண்டிற்கான பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஒன்பதாவது முறை நடைபெற்றது.

| வ. எண். | இனம் | 29.08..2017-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் | 04.01.2018-ல் நடைபெற்ற ஏலத்தில் பெறப்பட்ட உயர்ந்த பட்ச ஏலத் தொகை மற்றும் ஏலதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.51 பொன்னே வீதி மாநகராட்சி வணிக வளாகம் முதல் தளம் கடை எண்.6 (154சதுரடி) அரசுநிர்ணய மதிப்பீடு ரூ.17710/- | M/s.Covai Money Max Gold LLP,Coimbatore ரூ.16,100/- (ஒப்பந்தப்புள்ளி) | M/s.Covai Money Max Gold LLP,Coimbatore ரூ.16,250/- (ஒப்பந்தப்புள்ளி) |
| | | திரு.R.கயிலை ராஜன் ரூ.15,400/- (மின் ஏலம்) | திரு.R.கயிலை ராஜன் ரூ.21,200/- (ஒப்பந்தப்புள்ளி) |

மேற்படி இனத்திற்கு ஏழு முறை ஏலம் நடைபெற்றுள்ளது. ஏலத்தில் ஒருவரும் கலந்துக்கொள்ளவில்லை. 29.08.2017-ல் நடைபெற்ற ஏலத்தில் மேற்படி கடை எண்.6-க்கு M/s.Covai Money Max Gold LLP,Coimbatore மற்றும் திரு.R.கயிலை ராஜன் அவர்கள் கலந்துகொண்டார்கள். M/s.Covai Money Max Gold LLP,Coimbatore அவர்களிடமிருந்து அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

மேற்படி இனத்திற்கு திரு.R.கயிலைராஜன் என்பவர் மாநகராட்சி பொது ஏல நிபந்தனைகளின் படி ரூ.2,212,520/- (உயர்ந்தப்பட்ட ஏலக்கோரிக்கை மாத வாடகை ரூ.16100/- யுடன் 10 சதவீதம் சேர்த்து 12 மாத வாடகை தொகைக்கு) வரைவோலை உடன் மறு ஏலத்திற்கு 30.08.2017 அன்று விண்ணப்பம் வழங்கியுள்ளார். வைப்புத்தொகை கணக்கு எண்.4018 ரசீது எண்.201708313219 நாள்.31.08.2017-ல் மாநகராட்சி வருவாய் கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது. 04.01.2018 அன்று நடைபெற்ற ஏலத்தில் திரு.R.கயிலைராஜன் அவர்களிடமிருந்து ரூ.21,200/- மாதவாடகைக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. பார்வை (1)-ல் ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் உத்திரவு பெற்று ஒப்படைக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.345/17/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 149 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 வ.உ.சி பூங்கா சாலை ஸ்கேட்டிங் கிரவுண்ட் எதிர்புறம் அமைந்துள்ள 10’x20’ச.அடி அளவுள்ள காலி இடத்தில் புத்தக கடை அமைக்க இட ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை
1) தி/ள். விஜயா பதிப்பகம் அவர்களின் கடித நாள்.27.03.2017
2) காவல் துணை ஆணையர் போக்குவரத்து கோவை அவர்களின் உத்திரவு எண்.163 /கா.து.ஆ./ கோ./கோ./ மா./2017 நாள்.05.05.2017
3) ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள்.10.07.2017

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்.72 வ.உ.சி பூங்கா சாலை ஸ்கேட்டிங் கிரவுண்ட் எதிர்புறம் அமைந்துள்ள 10’x20’ச.அடி அளவுள்ள காலி இடத்தை புத்தக கடை அமைக்க பார்வை 1-ல் காணும் கடிதத்தில் பொது மக்கள் அதிகம் கூடும் இடத்திலும், இளைஞர்களிடையே முகநூல். வரைத்தளங்கள் உபயோகிக்கும் பழக்கம் அதிகமாகிவிட்டதால், படிக்கும் பழக்கத்தினை அதிகரிக்க பார்வை 2-ல் காணும் காவல் துறை தடையின்மைச் சான்றுடன் ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டது.

பார்வை 3-ல் காணும் ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று ரூ.5000/-ம் மாத வாடகை என்ற அடிப்படையில் காலி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்:3025/2017/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 150 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் 2018-2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு 20.04.2018 –ல் நடைப்பெற்ற பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வருடாந்திர குத்தகை இனங்களை ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

**பார்வை :** ஆணையயாளர் அவர்களின் உத்திரவு நாள் 27.04.2018.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் 2018-2021-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களில் ஏலம் போகாத மற்றும் மூன்றாண்டு முடிவுற்ற ஏல இனங்களுக்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.04.2018 –ல் நடைபெற்றது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள இரண்டு இனங்களுக்கு மட்டும் ஏலவைப்பு தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனர். மேலும் மீதமுள்ள இரண்டு இனங்களுக்கு ஏலவைப்பு தொகை ஏதும் பெறப்படவில்லை.

**இனம் 1** . உக்கடம் ஆடு அறுவைமனை (கழிவு நீர் பண்ணை ) கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை | அரசு மதிப்பு |
|---|---|---|---|
| 1 | சி.ஆர். நடராஜன் | 8,77,779/- | 9,16,260/- |
| 2 | எஸ். பழனிச்சாமி | 7,02,000/- | |

**இனம் 2.** சுண்டக்காமுத்தூர் கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

**இனம் 3.** குளத்துப்பாளையம் கட்டணக்கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

**இ**

**னம் 4.** சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கிடங்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஏலத்தொகை | அரசு மதிப்பு |
|---|---|---|---|
| 1 | எஸ்.மணிகண்டன் | 1,62,000/- | 1,61,026/- |
| 2 | பி.கார்த்திக் | 1,59,000/- | |

மேற்படி இனம் 2 மற்றும் 3-க்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை எனவே மறு ஏலம் கோரலாம்.

இனம் 4 -ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கிடங்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு ஏலதாரர் திரு. எஸ்.மணிகண்டன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.1,62,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இத்தொகை அரசு மதிப்பை காட்டிலும் 974/- அதிகமாக கோரியுள்ளதால் மேற்படியாளருக்கு சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கிடங்கு வசூலிக்கும் உரிமத்தினை திரு.எஸ்.மணிகண்டன் என்பவருக்கு ஓதுக்கீடு செய்யலாம்.

இனம் 1-ல் உள்ள ஆடு ஆறுவைமனை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.சி.ஆர்.நடராஜன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.8,77,789/-க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேலும் இத்தொகை அரசு மதிப்பை காட்டிலும் ரூ.38,481/- மட்டுமே குறைவாக உள்ளது. மேற்படி இனம் 1.08.2017 முதல் துறை மூலம் வசூல் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கடந்த ஆண்டு துறை மூலம் ரூ.3,47,000/- வசூல் செய்யப்பட்டுள்ளதால் திரு.சி.ஆர்.நடராஜன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ.8,77,789/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இது கடந்த ஆண்டை காட்டிலும் அதிகமாக உள்ளது. துறைமூலம் வசூல் செய்யப்படுவதாலும் பணியாளர் சம்பளம் மற்றும் ரசீது அச்சடிக்கும் செலவு ஆகியன அதிகமாக உள்ளதால் தற்போது கோரியுள்ள ஏலத்தொகை ரூ.8,77,779/-க்கு திரு.சி.ஆர். நடராஜன் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

எனவே வரிசை எண் 4 -ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கிடங்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உயர்ந்தப்பட்சமாக ஏலத் தொகை கோரிய திரு. எஸ்.மணிகண்டன் என்பவருக்கும் வரிசை எண் 1 –ல் உள்ள ஆடு ஆறுவைமனை கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உயர்ந்தப்பட்சமாக ஏலத் தொகை கோரிய திரு. சி.ஆர். நடராஜன் என்பவருக்கும் மற்றும் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க எண் 220/17/அ1(தெ)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 151 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் - உக்கடம் - ஆத்துப்பாலம் மேம்பாலம் கட்டும்பணி - மாநகராட்சிக்கு சொந்தமான உக்கடம் பழைய மீன்மார்க்கெட் வணிக வளாகம் - 24 பழக்கடைகளுக்கு வார்டு 86, உக்கடம் ஆடு அறுவைமனை அருகில் இட ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

பார்வை :
1. உதவி ஆணையாளர், மத்திய மண்டலம் அவர்களின் அலுவல்சாரா குறிப்பு நாள்.18.04.2018.
2. தலைவர் மற்றும் செயலாளர், கோவை மாநகராட்சி காய் கனி பழக்கமிஷன் வியாபாரிகள் நல சங்கம், கோவை-1.
3. ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் உத்திரவு நாள்.27.4.2018

***************

பார்வை 1-ல் காணும் குறிப்பில், உக்கடம் ஆத்துப்பாலம் மேம்பாலம் கட்டும் பணிக்காக உக்கடம் பழைய மீன்மார்க்கெட் வணிக வளாகத்திலுள்ள 24 பழக்கடைகளுக்கு தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் ஆடு அறுவைமனை அருகில் தற்காலிகமாக இட வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பழக்கடை வாடகைதாரர்களின் பெயர் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ. எண். | கடை எண் | கடை வாடகைதாரர் பெயர் |
|---|---|---|
| 1. | 1 | கே.உம்மர் |
| 2. | 2 | யு.எம்.ஜவஹர் |
| 3. | 3 | யு.எ.ஜெய்லானி |
| 4. | 4 | கே.உம்மர் |
| 5. | 5 | எம்.எம்.அலி. |
| 6. | 6 | எம்.சித்திக் |

| | | |
|---|---|---|
| 7. | 7 | எம்.ஏ.காதர். |
| 8. | 8 | வி.கே.கோயா |
| 9. | 9 | வி.கே.அபுபக்கர் |
| 10. | 10 | வி.கே.குஞ்சு |
| 11. | 11 | எம்.குஞ்சுமோன் |
| 12. | 12 | கே.ஜலாலுதீன் |
| 13. | 13 | எம்.ஏ.ஷாபி |
| 14. | 14 | கே.ஜலாலுதீன் |
| 15. | 15 | எம்.ஏ.ரசீத் |
| 16. | 67 | ஏ.அபுதாகீர் |
| 17. | 68 | கே.ஜலாலுதீன் |
| 18. | 69 | எம்.ஏ.காதர் |
| 19. | 70 | அமினாபீபீ |
| 20. | 71 | சி.ஏ.பாத்திமா |
| 21. | 72 | கே.பி.அப்துல்லா |
| 22. | 73 | எம்.ஏ.காதர். |
| 23. | 74 | எம்.எம்.அலி |
| 24. | 75 | கே.குஞ்சாலி |

தெற்கு மண்டலம், வார்டு 86, உக்கடம் கழிவு நீர் பண்ணையில் உள்ள ஆடு அறுவை மனை 2018-2019 ம் ஆண்டிற்கு ரூ.8,87,779/-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

மேற்படி ஆடு அறுவைமனை அருகில் காலியாக உள்ள இடத்தில் வரைப்படத்தில் கண்டுள்ளவாறு 24 பழக்கடைகளுக்கு ஒரு கடைக்கு 128 சதுரடி வீதம் இடவாடகையாக ஒரு கடைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/- மற்றும் அதற்குண்டான GST கட்டணம் சேர்த்து நிர்ணயம் செய்து தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யலாம்.

பார்வை 2-ல் விண்ணப்பத்தில் மேற்படி 24 பழக்கடைகளுக்கும் மொத்த வியாபாரத்திற்கு விற்பனைக்கு வரும் சரக்குகளை இறக்கி ஏலம் விடுவதற்கு தேவையான காலியிடத்திற்கு காலியிடத்தினை ஒதுக்கீடு செய்து தருமாறு கோவை மாநகராட்சி காய் கனி பழ கமிஷன் வியாபாரிகள் நலச் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

எனவே, மேற்படி ஓதுக்கீடு செய்யப்படும் காலியிடத்தின் பின்புறமுள்ள காலியிடத்திற்கு மாத வாடகை ரூ.60,000/- என நிர்ணயம் செய்து ‘‘கோவை மாநகராட்சி காய் கனி பழ கமிஷன் வியாபாரிகள் நலச் சங்கம் ‘‘ என்ற பெயரில் தற்காலிகமாக ஒதுக்கீடு செய்யலாம்.

மேற்படி 24 பழக்கடைகளுக்கான காலியிடத்திற்கு கடை ஒன்றிற்கு ஒரு வருட வாடகையினை காப்புத் தொகையாகவும், கடை ஒன்றிற்கு ஒரு வருட வாடகையினை முன்பணமாகவும் வசூல் செய்து கொண்டு மாநகராட்சி பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இட ஒதுக்கீடு ஆணை 24 நபர்களுக்கு வழங்கலாம்.

சரக்குகளை இறக்கி ஏலம் விடுவதற்காக ஓதுக்கீடு செய்யப்படும் காலியிடத்திற்கு ஒரு வருட வாடகையினை காப்புத் தொகையாகவும், ஆறு மாத வாடகையினை முன்பணமாகவும் வசூல் செய்து கொண்டு மாநகராட்சி பொது ஏலம் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு இட ஒதுக்கீடு ஆணை நலச் சங்கத்தின் பெயரில் வழங்கவும் இட ஒதுக்கீடு செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க எண் 004261/2018/அ1(தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 152 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 55 காய்கடை மைதானம் மாநகராட்சி வணிக வாளகம் கடை எண் 5 மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியது - கடையினை ஒப்படைப்பு செய்வது - தொடர்பாக

********

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 55 காய்கடை மைதானம் மாநகராட்சி வணிக வாளகம் முதல் தளம் கடை எண் 5 மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 20.04.2018 ம் தேதியில் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

**<u>கடை எண் 5</u>** (அரசு மதிப்பு ரூ. 5200/- கடையின் அளவு 121 ச.அடி)

| வ.எண் | ஏலதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.மாணிக்கம் | ரூ.5251/- |
| 2 | திருமதி.சரோஜினி | ரூ.4000/- |

மேற்படி திரு.மாணிக்கம் என்பவர் அரசு மதிப்பினை காட்டிலும் கூடுதலாக ரூ.5251/- உயர்ந்தபட்சமாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

எனவே உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய ஏலதாரருக்கு கடையினை ஒப்படைப்பு செய்ய அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 1780/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 153 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

.

பொருள் : குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - 2018- 2021-ம் மூன்றாண்டுகளுக்கு வருடாந்திர குத்தகை இனங்கள் - வார்டு எண் 64, சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 3 எண்ணிக்கையில் தொலைபேசி பூத் வைத்து நடத்திக் கொள்ளும் உரிமத்திற்கு 20.04.2018 ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் அனுமதி கோருதல் - தொடர்பாக.

பார்வை : 1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் நாள். 20.04.2018.
2. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள்.09. 05.2018.

-----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு 2018-2021 –ம் மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்கும் பொருட்டு 06.03.2018,20.03.2018 மற்றும் 20.04.2018- ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் மின்ஏலம் கோரப்பட்டது.

| வ. எண் | வார்டு எண் | குத்தகை இனம் |
|---|---|---|
| 1. | 64 | சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 3 எண்ணிக்கையில் தொலைபேசி பூத் வைத்து நடத்திக் கொள்ளும் உரிமம் |
| 2. | 64 | பேருந்து நிலையத்திலுள்ள பொருள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |
| 3. | 69 | புலியகுளம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் |

இவற்றில் வரிசை எண் 1-ல் கண்டுள்ள சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் 3 எண்ணிக்கையில் தொலைபேசி பூத் வைத்து நடத்திக் கொள்ளும் உரிமம் குத்தகை இனத்திற்கு 20.04.2018–ம் தேதியன்று 3-வது முறையாக நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்டுள்ளவாறு உச்சக் கேள்வி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் | மாநகராட்சி மதிப்பு |
|---|---|---|---|
| 1. | திருமதி. எஸ். கலா | 80,500/- | 80000 |

மேற்கண்ட இனத்திற்கு கடந்த 06.03.2018, 20.03.2018 மற்றும் 20.04.2018 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கடந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளிலும் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் 3-வது முறையாக 20.04.2018-ம் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திருமதி.எஸ்.கலா என்பவர் மட்டும் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி பதிவு செய்துள்ளார். இத்தொகை ரூ. 80,500/- ஆனது சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ. 74,603/- மற்றும் மாநகராட்சி மதிப்பு ரூ.80,000/- விடவும் கூடுதலாகும்.

தற்பொழுது அலைபேசியின் பயன்பாடு பொதுமக்களிடம் அதிக அளவில் இருப்பதால் பொது தொலைபேசியை அதிகம் எவரும் பயன்படுத்துவதில்லை. எனவே பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தாத நிலையில் பேருந்து நிலையத்திற்குள் அமைந்துள்ள பொது தொலைபேசியினை ஏலம் கோர எவரும் முன் வருவதில்லை. இவ்வினத்தை தொடர்ந்து ஏலம் விடுவதால் மாநகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுமே தவிர இவ்வினத்தின் மூலம் கூடுதல் வருவாய் ஏதும் கிடைக்கப்பெற வாய்ப்பில்லை.

எனவே மேற்படி தொலைபேசி பூத் வைத்து நடத்திக் கொள்ளும் உரிம இனத்திற்கு திருமதி.எஸ். கலா என்பவரின் உச்சக் கேள்வித் தொகை ரூ. 80,500/- ஐ ஏற்று 2018-2019 முதல் 2020-2021 வரையிலான 3 ஆண்டுகளுக்கு ஒப்படை செய்யவும், இதர வரிசை எண் (2) மற்றும் (3)-ல் கண்டுள்ள ஏலம் கோர முன்வராத சிங்காநல்லூர் பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்தையும் மற்றும், புலியகுளம் மாநகராட்சிக் கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிம இனத்தையும் மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் : 668/2017/அ11(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 154 நாள் 08.06.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

பொருள் : குத்தகை – கோயம்புத்தூர்மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வார்டு எண் 57- மசக்காளிபாளையம் மாநகராட்சி வணிக வளாகக் கடை எண் 7-ற்கு உரிய உரிமக்காலம் 3 தொகுப்பு கொண்ட 9 ஆண்டுகளில் முதலாவது முறையாக வழங்கப்பட்ட உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் 2-வது முறையாக மூன்றாண்டுகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை உரிம நீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை 1. அரசாணை(நிலை) எண் 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந-2).துறை, நாள்:30.07.2007.

2. மாமன்ற தீர்மானம் எண். 300, நாள். 22.12.2015.

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 57, மசக்காளிபாளையம் மாநகராட்சி வணிக வளாகக் கடை எண் 7-க்கு பார்வை (2)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி பெற்று, 3 தொகுப்பு கொண்ட 9 ஆண்டுகளில் முதலாவது முறையாக வழங்கப்பட்ட உரிமம் 31.03.2018 உடன் முடிவடைவதால் பார்வை (1)-ல் காணும் அரசாணையின்படி 2-வது முறையாக மூன்றாண்டுகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை 15 % வாடகை உயர்வு செய்து உரிம நீட்டிப்பு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

வார்டு எண் 57, மசக்காளிபாளையம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண் 7

| கடை எண் | குத்தகைதாரர் பெயர் திருவாளர்கள் | 2017-18 ஆண்டு மாத வாடகை ரூபாயில் | 15% உயர்வு செய்யப் பட வேண்டிய தொகை ரூபாயில் | 2017-18- முதல் மூன்றாண்டிற்கு ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட வேண்டிய மாத வாடகை தொகை ரூபாயில் | சேவை வரி ரூ. 18% |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | ப. கார்த்திகேயன் | 11400 | 1710 | 13110 | 2360 |

மேற்படி கடைகளுக்கு கலம் எண் 5-ல் கண்டுள்ள வாடகையை நிர்ணயம் செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்றாண்டுகள் உரிம நீட்டிப்பு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 10319/2013/ கி அ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 155 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 16**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 66 குட்பட்ட உடையாம்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 66 | உடையாம்பாளையம் உயர்நிலைப்பள்ளியில் புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு (ந.க.எண்: 4141 /2018/எம்.டி.3) | 12.00 |

மேற்பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வரைவு கூட்டபொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 4141 /2018/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 156 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 17**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 66 குட்பட்ட தொட்டிச்சி அம்மன் கோவில் வீதி பகுதியில் புதிதாக பெண்கள் பொது கழிப்பறை கட்டுதல் மற்றும் ஆண்டாள் லே-அவுட் மற்றும் அய்யர் மருத்துவமனை சாலை பகுதியில் மழைநீர் வடிகால் திரும்பக்கட்டுதல் பணிக்கு மேற்கொள்ளளும் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

| வ. எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 66 | தொட்டிச்சி அம்மன் கோவில் வீதி பகுதியில் புதிதாக பெண்கள் பொது கழிப்பறை கட்டுதல் பணிக்கு (ந.க.எண் 4025/2018/எம்.டி3) | 16.80 |
| 2. | 66 | ஆண்டாள் லே-அவுட் மற்றும் அய்யர் மருத்துவமனை சாலை பகுதியில் மழைநீர் வடிகால் திரும்பக்கட்டுதல் பணிக்கு (ந.க.எண் 4024/2018/எம்.டி3) | 5.00 |

மேற்பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வரைவு கூட்டபொருள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 4025/2018/எம்.டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 157 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – 01.10.2018 முதல் தொழில்வரி உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.11 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 12.01.1999.
2. மாமன்ற தீர்மானம் எண்.203 நாள். 19.09.2013.
3. மாமன்ற தீர்மானம் எண்.381 நாள். 22.01.2015.
4. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது கடிதம் ந.க.எண். 12503/2018/ஆர்.1 நாள். 21.05.2018

--------

பார்வை 1-ல் காணும் அரசாணையில், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் 01.10.1998 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி 25% முதல் 35% வரை உயர்வு செய்யப்பட்டு, மன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என உள்ளது.

இதன்படி, பார்வை (1) மற்றும் (2)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 01.04.2014 முதல் தொழில்வரி மறு நிர்ணயம் செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு திருத்திய தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தொழில் வரி ரூ |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ.127/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ.317/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ.634/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ.950/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ.1250/- |

மேற்படி, நடைமுறையிலுள்ள தொழில்வரி விகிதமானது 30.09.2018ல் முடிவிற்கு வருவதால், பார்வை (3)ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது கடிதத்தில், தெரிவித்துள்ளவாறு, 01.10.2018 முதல் தற்போது வசூலிக்கப்படும் தொழில்வரியிலிருந்து 35% சதவீதம் உயர்வு செய்து நிர்யணம் செய்வதற்கும், தொழில்வரி விதிகளின்படி, அதிகபட்ச தொழில்வரியாக ரூ.1250/-யை தொடர்ந்து நிர்ணயித்து வசூலிப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

01.10.2018 முதல் உயர்வு செய்வதால் ஏற்படும் புதிய தொழில்வரி விகிதம்

| வரிசை எண் | அரையாண்டு சராசரி வருமானம் | தொழில் வரி | |
|---|---|---|---|
| | | அரையாண்டு தொழில் வரித்தொகை 30.09.2018 வரை ரூ | 35% உயர்வு செய்து **01.10.2018** முதல் அரையாண்டு தொழில் வரித்தொகை ரூ |
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ.127/- | ரூ. 171/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ.317/- | ரூ. 428/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ.634/- | ரூ. 856/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ.950/- | ரூ.1250/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ.1250/- | ரூ.1250/- |

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண் 4844/2018/எம்.ஏ1

**மாநகர மன்ற தீர்மானம் எண் 158 நாள் 08.06.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 19**

பொருள்: நிலம் – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம் – சங்கனூர் கிராமம் – புல எண்.535/1ல் 2400 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலத்தில் கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைக்க மாநகராட்சியின் தீர்மானம் கேட்டுக்கொண்டது தொடர்பாக.

பார்வை:
1. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.11055/2011/ஆ4, நாள்.10.07.2017 மற்றும் 13.10.2017.
2. வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர் (வடக்கு) அவர்களின் கடிதம் ந.க.எண்.3981/2016/அ3, நாள்.17.10.2017.

*******

பார்வையில் காண் கடிதங்களில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம், சங்கனூர் கிராமம், புல எண்.535/1ல் 2400 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலத்தில் கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைக்க மாநகராட்சியின் தீர்மானம் நிறைவேற்றி தரக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி இடமானது வருவாய் துறை ஆவணங்களில் 156/4 தீர்வை ஏற்பட்ட தரிசு எனவும், 156/5 ஆதி திராவிடர் நலத்துறை பெயரிலும் பதிவாகியும் குறிப்பு கலத்தில் ஹாஸ்டல் கட்டிடம் என பதிவு உள்ளது. ஆகவே, மேற்கண்ட சங்கனூர் கிராமம், புல எண்.535/1ல் 2400 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலத்தில் கோயம்புத்தூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைக்க மாநகராட்சியின் தடையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.569/2017/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 159 நாள் 08.06.2018</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

பொருள்: நிலம் – நில உரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம் – கொமாரபாளையம் கிராமம், ட.ச.38/8 புலத்தில் 7¼ செண்ட் பரப்புள்ள நிலத்தினை செல்வபுரம் காவல் நிலையத்திற்காக தமிழக காவல்துறைக்கு நிலமாற்றம் செய்தல் – மாநகராட்சியின் தடையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பித்ததல் – தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், பேரூர் அவர்களின் கடிதம் ந.க.3587/2014/அ7, நாள்.04.05.2018.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம், கொமாரபாளையம் கிராமம், ட.ச.38/8 புலத்தில் 7¼ செண்ட் பரப்புள்ள நிலத்தினை செல்வபுரம் காவல் நிலையத்திற்காக தமிழக காவல்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத்தின் ஆட்சேபணை ஏதுமிருப்பின் 15 தினங்களுக்குள் தெரிவிக்க பார்வையில் காண் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம், கொமாரபாளையம் கிராமம், ட.ச.38/8 புலத்தில் 7¼ செண்ட் பரப்புள்ள நிலத்தில் செல்வபுரம் காவல் நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. இவ்விடம் வருவாய் வகைப்பாட்டின்படி நத்தம் புலமாக 292.00 ச.மீ பரப்பளவில் உள்ளது. ஆகவே, அரசு ஆவணங்களின்படி நத்தம் புலமாக உள்ள மேற்படி இடத்தினை தமிழக காவல்துறைக்கு நிலமாற்றம் செய்வது தொடர்பாக மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4997/2018/எம்.எச்5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 160 நாள் 08.06.2018</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள்: நிலம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டம் – சரவணம்பட்டி கிராமம் – க.ச.554/1 நத்தம் புறம்போக்கு – வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடம் கட்ட 29 செண்ட் நிலம் கோரியது – அங்கீகாரம் அளித்து மாநகராட்சியின் தீர்மானம் கேட்டுக்கொண்டது தொடர்பாக.

பார்வை: வட்டாட்சியர், கோயம்புத்தூர் வடக்கு அவர்களின் கடிதம் ந.க.1512/2018/ஆ8, நாள்.02.02.2018.

*******

பார்வையில் காண் கோயம்புத்தூர் வடக்கு வட்டாட்சியர் அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சரவணம்பட்டி கிராமம் க.ச.554/1 நத்தம் புறம்போக்கு காலையில் 29 செண்ட் நிலம் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடம் கட்ட நிலமாற்றம் செய்வதற்கு அங்கீகாரம் அளித்து மாநகராட்சியின் தீர்மானம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிலமானது வருவாய் ஆவணங்களில் மந்தை புறம்போக்கு என பதிவாகி உள்ளது. எனவே, மேற்கண்ட சரவணம்பட்டி கிராமம் க.ச.554/1 மந்தை புறம்போக்கு காலையில் 29 செண்ட் நிலைத்தினை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சியின் தடையின்மை தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 2295/2018/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 161 நாள் 08.06.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள்: நிலம் – நில உரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம் – குனியமுத்தூர் கிராமம் – நத்தம் – புல எண்.1178/2 (பழைய க.ச.225/3)ல் 18.12 செண்ட் நிலம் – சமுதாயக் கூடம் கட்டும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமைமாற்றம் செய்யக் கோரியது – நில உரிமைமாற்றம் செய்வதை முன்னிறுத்தி முன்நுழைவு அனுமதி வழங்கி மாவட்ட ஆட்சியரால் உத்திரவிடப்பட்டது – நிலஉரிமை மாற்றம் செய்யவும் நிலமதிப்பு தொகை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்பித்தல் – தொடர்பாக.

பார்வை: கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.7723/2013/ஆ3, நாள்.04.05.2018.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட, கோயம்புத்தூர் மாவட்டம் பேரூர் வட்டம், குனியமுத்தூர் கிராமம், நத்தம் புல எண்.1178/2 (பழைய க.ச.225/3)ல் 18.12 செண்ட் நிலம் சமுதாயக் கூடம் கட்டும் பொருட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமைமாற்றம் செய்யக் கோரியதன் அடிப்படையில், சர்கார் புறம்போக்கு எனத் தாக்கலாகியுள்ள க.ச.1178/2 (பழைய க.ச.எண்.225/3) காலையில் உள்ள 32 செண்ட் நிலத்தில், சமூதாயக் கூடம் கட்டும் பொருட்டு 18.12 செண்ட் இடத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமைமாற்றம் செய்வதை முன்னிறுத்தி கீழ்காணும் நிபந்தனைகளுடன் முன்நுழைவு அனுமதி வழங்கி பார்வையில் காண் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1. பிரஸ்தாப நிலம் எந்த நோக்கத்திற்காக கோரப்பட்டுள்ளதோ அதற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
2. பிரஸ்தாப நிலத்தின் ஏதாவது பகுதி தேவையில்லை எனில் அதனை உடனடியாக அரசுக்கு ஒப்படைக்கவேண்டும்.
3. வருவாய் நிலை ஆணை எண்.24(9)ல் குறிப்பிட்டுள்ள நிபந்ததனைகள் கடைப்பிடிக்க வேண்டும்.
4. உத்தேச நிலமதிப்புத் தொகை ரூ.26,44,179/– ம், உட்பிரிவு கட்டணம் மற்றும் கல் கட்டணம் போன்றவற்றை கேட்புத் துறையினர் செலுத்த வேண்டும்.

ஆகவே, மேற்காண் க.ச.1178/2 (பழைய க.ச.எண்.225/3)ல் 18.12 செண்ட் நிலத்தினை சமுதாயக் கூடம் கட்டும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு நில உரிமைமாற்றம் செய்யவும், உத்தேச நிலமதிப்புத் தொகை ரூ.26,44,179/– ம், உட்பிரிவு கட்டணம் மற்றும் கல் கட்டணம் ஆகியவற்றை சம்பந்தப்பட்ட துறைக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 4866/2018/எச்1(தெ)/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 162 நாள் 08.06.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண். 76, 77, 78, 79, 85, 86, 87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97, 98, 99 மற்றும் 100க்கு உட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல், விடுபட்ட பகுதியில் கிணற்றுநீர் விநியோக குழாய் பொருத்துதல், சின்டேக்ஸ் டேங்க் அமைத்தல், கூடுதல் பகிர்மான குழாய் அமைத்தல் மற்றும் குடிநீர் அபிவிருத்தி பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

| வ.எண் | வா.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | 76 | வார்டு எண். 76 க்குட்பட்ட இந்திரா நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல். ந.க.எண். 4653 /2018/ எம்.டி 4 | 5.00 |
| 2. | 76 | வார்டு எண்.76 க்குட்பட்ட ராஜீவ் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் ந.க.எண். 4654/2018/ எம்.டி 4 | 5.00 |
| 3. | 78 | வார்டு எண்.78 க்குட்பட்ட டேங்க் பண்ட் ரோடு பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல். ந.க.எண். 4655/2018/ எம்.டி 4 | 5.00 |
| 4. | 78 | வார்டு எண்.78 க்குட்பட்ட ஐ.யு.டி.பி காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல். ந.க.எண். 4831 /2018/ எம்.டி 4 | 5.00 |
| 5. | 79 | வார்டு எண்.79 க்குட்பட்ட தடாகம் ரோடு முருகன் கோவில் அருகில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல். ந.க.எண். 4656 /2018/ எம்.டி 4 | 5.00 |
| 6. | 77 | வார்டு எண்.77 க்குட்பட்ட சொக்கம்புதுர் மயானம் முதல் வடக்கு ஹவுசிங் யூனிட் வரை கிணற்று நீர் பகிர்மான குழாய்கள் அமைத்தல். ந.க.எண். 4657 /2018/ எம்.டி 4 | 18.00 |
| 7. | 77 | வார்டு எண்.77-ல் உள்ள வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் ஆழ்துளை கிணற்று நீர் விநியோகம் செய்ய வேண்டி, சொக்கம்புதுர் மின் மயானம் அருகில் கீழ்நிலைத்தொட்டி கட்டுதல் மற்றும் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல். ந.க.எண். 4658 /2018/ எம்.டி 4 | 20.00 |
| 8. | 77 | வார்டு எண் 77-க்குட்பட்ட சண்முகராஜபுரம் மற்றும் வடக்கு ஹவுசிங்யூனிட் பகுதிகளில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். ந.க.எண். 4659/2018/ எம்.டி 4 | 20.00 |
| 9. | 78 | வார்டு எண் 78-க்குட்பட்ட ஐ.யு.டி.பி காலனி, வடக்கு ஹவுசிங் யூனிட், சந்திரசேகரபுரம் மற்றும் நாடார் வீதி பகுதிகளில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல். ந.க.எண். 4660 / 2018/ எம்.டி 4 | 25.00 |
| 10. | 87 | வார்டு எண் 87- க்குட்பட்ட பாலக்காடு பிரதான சாலையில் உள்ள பழுதடைந்த கிணற்று நீர் குழாய்களை மாற்றி அமைத்தல் ந.க.எண் 4661 /18/எம்டி4 | 2.90 |
| 11. | 87 | வார்டு எண் 87- க்குட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் விநியோக குழாய் மாற்றி அமைத்தல் ந.க.எண் 4662 /18/எம்டி4 | 3.20 |
| 12. | 90 | வார்டு எண் 90- க்குட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் விநியோக குழாய் மாற்றி அமைத்தல் ந.க.எண் 4663 /18/எம்டி4 | 3.75 |
| 13. | 91 | வார்டு எண் 91- க்குட்பட்ட பகுதியில் ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் விநியோக குழாய் மாற்றி அமைத்தல் ந.க.எண் 4664 /18/எம்டி4 | 4.30 |

| | | | |
|---|---|---|---|
| 14. | 88 | வார்டு எண்:88-க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் குழாய் பொருத்துதல் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு கிணற்று நீர் விநியோக குழாய் பொருத்துதல்.<br>ந.க.எண்: 4665/18/டி1(தெ) | 3.50 |
| 15. | 89 | வார்டு எண்:89-க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் குழாய் பொருத்துதல் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு கிணற்று நீர் விநியோக குழாய் பொருத்துதல்.<br>ந.க.எண்: 4666/18/டி1(தெ) | 3.80 |
| 16. | 92 | வார்டு எண்:92-க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் குழாய் பொருத்துதல் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு கிணற்று நீர் விநியோக குழாய் பொருத்துதல்.<br>ந.க.எண்: 4667/18/டி1(தெ) | 4.00 |
| 17. | 93 | வார்டு எண்:93-க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளுக்கு கூடுதல் குழாய் பொருத்துதல் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு கிணற்று நீர் விநியோக குழாய் பொருத்துதல்.<br>ந.க.எண்: 4668/18/டி1(தெ) | 4.00 |
| 18. | 88, 89, 92, 93 | வார்டு எண்:88,89,92 மற்றும் 93-க்குட்பட்ட பகுதிகளுக்கு கிணற்றுநீர் விநியோகப்பணிக்கு திருகு அடைப்பான் வழங்கி பொருத்துதல்.<br>ந.க.எண்: 4669/18/டி1(தெ) | 5.00 |
| 19. | 87, 88, 89, 90, 91, 92, 93 | குனியமுத்தூர் பகுதிகள் குடிநீர் விநியோகப் பிரிவு, வார்டு எண்:87,88,89,90,91,92மற்றும் 93-க்குட்பட்ட விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மானக்குழாய் அமைத்தல்.<br>ந.க.எண்.: 4670 /18/டி1(தெ) | 9.40 |
| 20. | 87, 88, 89, 90, 91, 92 , 93 | வார்டு எண்:87,88,89,90,91,92 மற்றும் 93-க்குட்பட்ட குடிநீர் விநியோகப்பணிகளுக்கு திருகு அடைப்பான் வழங்கி பொருத்துதல்.<br>ந.க.எண்.:4671 /18/எம்.டி4 | 6.00 |
| 21. | 94 | வார்டு எண் 94க்குட்பட்ட பொள்ளாச்சி சாலையில் ஆழ்குழாய் கிணற்று நீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண் 4672 /18/எம்.டி4 | 9.70 |
| 22. | 99 | வார்டு எண் 99 க்குட்பட்ட போத்தனூர் நஞ்சுண்டாபுரம் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று நீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண் 4673 /18/எம்.டி4 | 10.00 |
| 23. | 99 | வார்டு எண் 99 க்குட்பட்ட GD டேங்க் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணி ந.க.எண் 4674 /18/எம்.டி4 | 5.00 |
| 24. | 96 | வார்டு எண் 96 க்குட்பட்ட பகுதிகளில் 7.5 hp ஆழ்துளை கிணறு மின் மோட்டார் மற்றும் 2''Gi பைப் மாற்றிஅமைத்தல்<br>ந.க.எண் 4675 /2018/ MD4 | 5.00 |
| 25. | 98 | வார்டு எண் 98க்குட்பட்ட பகுதிகளில் 7.5 hp ஆழ்துளை கிணறு மின் மோட்டார் மற்றும் 2''Gi பைப் மாற்றிஅமைத்தல்<br>ந.க.எண் 4701 /2018/ MD4 | 5.00 |
| 26. | 98 | வார்டு எண் 98 -க்குட்பட்ட பகுதிகளில்` 2'' ஆழ்துளை கிணறு விநியோக குழாய் அமைத்தல் பணிக்காக<br>ந.க.எண் 4676 /2018/ MD4 | 10.00 |
| 27. | 99 | வார்டு எண் 99 -க்குட்பட்ட மேட்டூர் மேல் நிலை நீர் தேக்கதொட்டி முதல் அன்புநகர் மேல் நிலை நீர் தேக்கதொட்டி வரை DI பிரதான குழாய் அமைத்தல்<br>ந.க.எண் 4677/2018/ MD4 | 25.70 |
| 28. | 99 மற்றும் 100 | வார்டு எண் 99 மற்றும் 100 -க்குட்பட்ட அன்புநகர் மேல் நிலை நீர் தேக்கதொட்டி முதல் இரயில்வே கேட், அண்ணாபுரம், மேட்டூர் சாலை , நபி நகர் ,அன்பு நகர், பகுதிகளுக்கு பிரதான குழாய் அமைத்தல்<br>ந.க.எண் 4678 /2018/ MD4 | 10.00 |
| 29. | 95, 97, 100 | வார்டு எண் 95.97,100க்குட்பட்ட லாட்ஸ் அவன்யூ ஹவுசிங் யூனிட் Phase -1 மற்றும் Phase -2 நீர்தேக்கத்தொட்டிக்கு பராமரிப்பு பணி<br>ந.க.எண் 4679 /2018/ MD4 | 9.80 |

| | | | |
|---|---|---|---|
| 30. | 100 | வார்டு எண் 100 -க்குட்பட்ட மதுரைவீரன் கோவில் வீதியில் ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4680 /2018/ MD4 | 5.00 |
| 31. | 100 | வார்டு எண் 100 - க்குட்பட்ட கிருஷ்ண சாமி நகரில் ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4681/2018/ MD4 | 5.00 |
| 32. | 100 | வார்டு எண் 100 - க்குட்பட்ட கார்மல் நகரில் ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4682/2018/ MD4 | 5.00 |
| 33. | 100 | வார்டு எண் 100 - க்குட்பட்ட கணேஷபுரம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4683 /2018/ MD4 | 5.00 |
| 34. | 100 | வார்டு எண் 100 - க்குட்பட்ட ஆடிட்டர்வீதி ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4684 /2018/ MD4 | 5.00 |
| 35. | 100 | வார்டு எண் 100 - க்குட்பட்ட ஈஸ்வரன் செட்டியார்வீதியில் ஆழ்துளை கிணறு அமைத்து பேனல் போர்டு பொருத்தும் பணி<br>ந.க.எண் 4685 /2018/ MD4 | 5.00 |
| 36. | | ஆத்துபொள்ளாச்சியிலுள்ள குடிநீா் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீா் உந்து நிலையத்திலுள்ள 500 மற்றும் 250 KVA ஜெனரேட்டா் பழுது பார்தல் மற்றும் பராமரித்தல்<br>ந.க.எண் 4686 /2018/ MD4 | 9.45 |
| 37. | | ஆச்சிபட்டியிலுள்ள குடிநீா் நீா் உந்து நிலையத்திலுள்ள 250 KVA ஜெனரேட்டா் பழுது பார்தல் மற்றும் பராமரித்தல்<br>ந.க.எண் 4687 /2018/ MD4 | 7.60 |
| 38. | 99 | வார்டு எண் 99க்குட்பட்ட மேட்டுா் குடிநீா் தேக்கத்தொட்டி 250 KVA ஜெனரேட்டா் பழுது பார்தல் மற்றும் பராமரித்தல்<br>ந.க.எண் 4688 /2018/ MD4 | 3.00 |
| 39. | 96 | வார்டு எண் 96க்குட்பட்ட லோகநாதபுரம் பகுதியில் மேல்நிலை நீா்தேக்கத்தொட்டிக்கு பிரதான குழாய் அமைத்தல் பணி<br>ந.க.எண் 4689/2018/ MD4 | 2.00 |
| 40. | 94, 95, 96, 97, 98, 99, 100 | வார்டு எண் 94, 95, 96, 97, 98, 99 & 100க்குட்பட்ட பகுதிகளில் திருகு அடைப்பான்கள் வழங்கி பொருத்துதல்<br>ந.க.எண் 4690 /2018/ MD4 | 7.00 |
| 41. | 99 | வார்டு எண் 99 க்குட்பட்ட அன்னை தெரசா லே - அவுட் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் பகிர்மான குழாய் பதித்தல்<br>ந.க.எண் 4691/2018/ MD4 | 5.00 |
| 42. | 99 | வார்டு எண் 99 க்கு சாமண்ணா நகா் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று நீா்தேக்க தொட்டி அமைத்தல் பணி<br>ந.க.எண் 4692 /2018/ MD4 | 9.30 |
| 43. | 99 | வார்டு எண் 99 க்குட்பட்ட சா்தாா் சாய் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் பகிர்மான குழாய் பதித்தல்<br>ந.க.எண் 4693 /2018/ MD4 | 5.00 |
| 44. | 97 | வார்டு எண் 97 க்குட்பட்ட பிள்ளையாா்புரம் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று நீா் பகிர்மான குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண் 4694 /2018/ MD4 | 10.00 |
| 45. | 95 | வார்டு எண் 95 க்குட்பட்ட வெங்கடாசலபதி நகா் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று நீா் பகிர்மான குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண் 4695 /2018/ MD4 | 5.00 |
| 46. | 76 | வார்டு எண். 76 க்குட்பட்ட வைத்தியா் ஆறுமுக உடையாா் வீதி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்.<br>ந.க.எண். 4696 /2018/ எம்.டி 4 | 5.00 |
| 47. | 89 | வார்டு எண் 89 க்குட்பட்ட இராமசெட்டிபாளையம் பகுதியில் 50,000 லிட்டா் கொள்ளளவுள்ள மேல் நிலை நீா்த்தேக்க தொட்டி கட்டுதல்<br>ந.க.எண் 4697 /2018/ MD4 | 9.80 |
| 48. | 89, 90, 91 | வார்டு எண் 89,90,91க்குட்பட்ட இராதாராம் நகா், சிறுவாணி நகா் மற்றும் குளத்துபாளையம் பகுதியிலுள்ள மேல் நிலைத்தொட்டி வளாகத்திற்கு கம்பி வேலி அமைத்தல்<br>ந.க.எண் 4698 /2018/ MD4 | 6.30 |

| | | | |
|---|---|---|---|
| 49. | 97 | வார்டு எண் 97 க்குட்பட்ட கஸ்தூரி நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று நீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி<br>ந.க.எண் 4699 /2018/ MD4 | 10.00 |
| 50. | 94 to 100 | குறிச்சி பகுதிகளுக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு பிளீச்சிங் பவுடர் வழங்குதல் பணி<br>ந.க.எண் 4700 /2018/ MD4 | 3.00 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் 4653 /2018/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 163 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 24

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி – பெண் மருத்துவ அலுவலர் திருமதி. எ.ஆனந்தவித்யா- குடும்பநல அறுவை சிகிச்சை மேற்கொண்டது- அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பெண் உடல்நல குறைவால் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தது – சம்பந்தப்பட்ட குடும்பத்தார் வழக்கு தொடர்ந்தது – நீதிமன்ற உத்திரவு பிறப்பிக்கப்பட்டது நஷ்ட ஈடு வழங்கியது - பின்னேற்பு வேண்டுதல் – தொடர்பாக.

***

திருமதி. ஈஸ்வரி என்பவர் கொக்கம்பாளையம், அட்டப்பாடி என்ற இடத்தில் St.Peter's மருத்துவமனையில் கடந்த 07.05.2000 அன்று அனுமதிக்கப்பட்டு அவருக்கு சுகப்பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது. அது சமயம் அவருக்கு எந்த ஒரு உடல்நல குறைவும் இல்லாமல் குடும்பநல அறுவைசிகிச்சைக்காக 10.05.2000 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சி வி.வி.எம் நகர் நல மையத்தில் அனுமதிக்கப்பட்டு 11.05.2000 அன்று பெண் மருத்துவர் அலுவலர் ஆனந்த வித்யா அவர்கள் மூலம் குடும்பநல அறுவை சிகிச்சை அதே நாள் பிற்பகல் 12.00 முதல் 3.00 மணிவரை மேற்கொள்ளப்பட்டது. அறுவை சிகிச்சை முடிந்தவுடன் அவருக்கு உடல் நல குறைவு மற்றும் வயிற்று வலி ஏற்பட்டு சுயநினைவு இழந்து 12.05.2000 அன்று கோவை அரசு மருத்துவமனையில் சிக்ச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பிறகு 16.05.2000 அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மேற்படி திருமதி.ஈஸ்வரி இறப்பு தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். மேலும் மேற்படி திருமதி.ஈஸ்வரி இறப்பிற்கு மாநகராட்சி பெண் மருத்துவ அலுவலரின் கவனக்குறைவு மற்றும் மெத்தனப்போக்கே காரணம் எனவும் மேலும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது திருமதி. ஈஸ்வரி அவர்களது மலக்குடல் அறுபட்டு அதிலிருந்து விஷகிருமிகள் வெளிவந்து முக்கிய உறுப்புகளை பாதித்ததே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக கோயம்புத்தூர் மற்றும் சென்னை உயர்நீதி மன்றங்களில் இறந்து போன திருமதி.ஈஸ்வரியின் கணவர் மற்றும் அவரது வாரிசுகள், பெண் மருத்துவ அலுவலர் திருமதி. ஆனந்தவித்யா, கோயம்புத்தூர் மாநகராட்சி, முதல்வர்,கோவை மருத்துவகல்லூரி மருத்துவமனை, இயக்குநர், மருத்துவ சேவைக்கழகம், மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்தனர்.

- கடந்த 17 ஆண்டுகளாக நடைபெற்ற இவ்வழக்கின் தீர்ப்பு கடந்த 31.10.2017 அன்று வழங்கப்பட்டது. அதன்படி காணும் உயர்நீதி மன்ற தீர்ப்பின் வாயிலாக பாதிக்கப்பட்ட குடும்ப நபர்களுக்கு கருணை அடிப்படையில் இழப்பு தொகையாக ரூ. 4,50,000/- மற்றும் இவ்வழக்கு பதிவான நாளிலிருந்து (10.01.2005 முதல் 03.11.2017 வரை) அத்தொகைக்கு 12% சதவீத வட்டி மற்றும் வழக்கு தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து நாளது தேதி வரை 9% சதவீத வட்டியும் (04.11.2017 முதல் வழங்கப்படும் நாள் வரை) கணக்கிட்டு கீழ்கண்ட பொறுப்பான அலுவலர்கள் மூலம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி

1. Dr. Andandavidya,Women Medical Officer, Coimbatore Corporation.
2. The Medical Officer, (Kurangu Seit Hospital), Dharmaraja koil st.,
3. The Dean, Coimbatore Medical College Hospital, Coimbatore.
4. The Director of Medical Services, Chepuk, Chennai
5. The District Collector, District Collectorate Coimbatore.
6. Coimbatore Corporation, rep, by its Commissioner, Coimbatore.

ஆகியோர் இழப்பு தொகைக்கு பொறுப்பானவர்கள் என நீதிமன்ற உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மாநகராட்சி சட்ட ஆலோசகரின் ஆலோசனையில் மேற்படி பாதிக்கபட்ட குடும்ப நபர்களுக்கு கருணை அடிப்படையில் நீதிமன்றம் தெரிவித்த தொகை ரூ. 4,50,000/- உடன் (10.01.2005 முதல் 03.11.2017 வரை (4179 நாட்கள்)) 12% சதவீத வட்டி தொகை ரூ. 6,18,283/-, வழக்கு தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து நாளது தேதி வரை 9% சதவீத வட்டி தொகை (04.11.2017 முதல் 31.03.2018 வரை) ரூ.16,311/- மற்றும் நீதி மன்ற கட்டணத் தொகை ரூ. 41,830/- சேர்த்து இழப்பீட்டுத்தொகை மொத்தம் ரூ. 11,26,424/- ஐ கோயம்புத்தூர் மாநகராட்சி தான் வழங்க வேண்டும் என மாநகராட்சி நிலை வழக்குரைஞர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

- மேலும் மேற்காண் கோப்பு 21.03.2018-க்கு முன்னர் வரை பொதுபிரிவில் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இக்கோப்பின் மீது நடவடிக்கை தொடருமாறு சட்ட அலுவலர் தனது குறிப்பின் வாயிலாக நகர்நல பிரிவிற்கு இக்கோப்பினை 21.03.2018 அன்று வழங்கியுள்ளார்.

- எனவே நீதி தீர்ப்பின்படி கோயம்புத்தூர் The Dean, Coimbatore Medical College Hospital, Coimbatore, மற்றும் The Director of Medical Services, Chepuk, Chennai ஆகியோரை மேற்படி இழப்புத்தொகையை செலுத்தக்கோருவது சாத்தியம் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மாவட்ட ஆட்சியரை மேற்படி இழப்புத்தொகையை செலுத்தக்கோரும் பட்சத்தில் பிரச்சனைகளை உருவாகும் சூழ்நிலை ஏற்படும் என்பதால் இவருக்கும் இழப்புத்தொகையை செலுத்தக்கோருவது சாத்தியம் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- மேலும் உதவி ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் குறிப்பில் உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி இழப்பு தொகையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்கவும் மற்றும் வரிசை எண் 1-ல் உள்ள அலுவலர் அவர்களிடமிருந்து இழப்புத்தொகையில் 6-ல் ஒரு பங்கு தொகையினை வசூல் செய்து மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் தெரிவித்துள்ளார்.

- எனவே மேற்படி மாநகராட்சி நிலை வழக்குரைஞர் மற்றும் உதவி ஆணையர் நிர்வாகம் அவர்களின் குறிப்பின்படி இழப்பீட்டுத்தொகை ரூ. 11,26,424/-ஐ பாதிக்கப்பட்டவருக்கு நீதிமன்றம் மூலம் வழங்கவும் மற்றும் வரிசை எண் 1-ல் உள்ள அலுவலர் அவர்களிடமிருந்து இழப்பீட்டுத்தொகையில் 6-ல் ஒரு பங்கு தொகையினை வசூல் செய்து மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் மன்றத்தின் பின்னேற்புக்கு அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம். ந.க.எண். 7535 /2009/ எம்.சி10(எம் இ.6)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 164 நாள் 08.06.2018</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 25**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத்திட்டம் ரூ. **377.13** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசாணை **(3டி)** எண்: **25,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, **(ந.நி,3)** நாள்: **24.10.2007** –ல் உரிய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்நிதியில் மத்திய அரசின் பங்கீடு **50%** மாநில அரசின் கடன்தொகை **20%** மற்றும் மாநகராட்சியின் பங்கீடு **30%** ஆகும். இத்திட்டப்பணி கீழ்கண்டவாறு ஆறு சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு செயலாக்கத்திற்கு கொண்டு வரப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| **1.** | பாதாள சாக்கடைத்திட்டம் | - | மண்டலங்கள் –I, II, V மற்றும் VI – ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி |
| **2.** | பாதாள சாக்கடைத்திட்டம் | - | மண்டலங்கள் –III மற்றும் VII – ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி |
| **3.** | பாதாள சாக்கடைத்திட்டம் | - | மண்டலங்கள் – IV மற்றும் VIII – ல் கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணி |

4. உக்கடம் பகுதியில் **70** எம். எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி
5. நஞ்சுண்டாபுரம் பகுதியில் **40** எம். எல். டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி

6. ஒண்டிபுதூர் பகுதியில் 60 எம். எல். டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி

இதனைத் தொடர்ந்து சிப்பம்–V ன் பணி நஞ்சுண்டாபுரம் பகுதியில் 40எம்எல்டி கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு வடிவமைப்பு, கட்டுமானம், இயக்கம் மற்றும் பராமரிப்பு (Design, Build, Operate & Transfer – DBOT Basis) செய்து ஒப்படைக்கும் முறையில் ரூ.32.22 கோடிக்கு கடந்த 27.02.2008 அன்று தேசிய அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் குறைந்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) என்ற நிறுவனத்திற்கு ரூ. 33.79 கோடி மற்றும் ரூ. 4.80 கோடிக்கு (இயக்கம் மற்றும் பராமரிப்பு) ஒப்பந்தப்புள்ளி சமர்பித்ததற்கு மாமன்றத்தின் தீர்மான எண். 273, நாள்: 27.03.2008–ல் ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து பதினெட்டு (18) மாத காலத்தில் பணி முடிக்க கடந்த 24.04.2008–ல் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிகள் கடந்த 05.05.2008 முதல் துவக்கப்பட்டு நிர்வாக அலுவலகம், கழிவு நீர் சேகரிப்பு கிணறு மற்றும் அதற்கான இயந்திரங்கள் மற்றும் மின் உபகரணங்கள் கொள்முதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ. 17.96 கோடி தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

கட்டுமானப்பணிகள் நடைபெற்று வந்த இடத்திற்கு அருகாமையில் வசித்து வரும் குடியிருப்போரால், மேற்படி பணியை தடைசெய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் (writ) மனு (வழக்கு எண். 6800/2009) தாக்கல் செய்யப்பட்டதன் மீது பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவின் படி கடந்த 23.04.2009 முதல் பணி நிறுத்தி வைக்கப்பட்டது.

கட்டுமான பணிகள் நிறுத்தப்பட்டு 42 மாதங்கள் (28.04.2009 முதல் 25.10.2012 வரை) கடந்த நிலையில் வழக்கு எண். 6800/2009–ல் உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சில நிபந்தனைகளுடன் கடந்த 25.10.2012 அன்று கட்டுமான பணிகளை மீண்டும் தொடர அனுமதி (Consent to Establish) வழங்கியது. அதில் குறிப்பிட்ட நிபந்தனைகள் கீழ்க்கண்டவாறு :

1. கழிவு நீர் சேகரிக்கும் தொட்டிகள் இரண்டினை (C – Tech Basin) மாற்றி அமைத்தல்.
2. சுத்திகரிப்பு நிலையத்தின் சுற்றுச்சுவரின் உயரத்தை அதிகப்படுத்துதல்.
3. கழிவு நீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து வெளிப்படும் துர்நாற்றத்தை குறைக்க கருவி (Odour Mitigation System) அமைத்தல்.
4. மின்னாக்கியின் கொள்ளளவை (Diesel Generator) 750 KVAக்கு பதிலாக 1250 KVA க்கு அதிகப்படுத்துதல்.
5. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்பை நேரடி ஆய்வு செய்யும் வகையில் கணினி முறையில், நஞ்சுண்டாபுரத்திலிருந்து சென்னையிலுள்ள மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இடையே நேரடி தொடர்புக்கு வழிவகை செய்தல்.

எனவே, தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனத்தை மீண்டும் மேற்கண்ட நிபந்தனைகளின்படி பணியினை தொடர வேண்டி இவ்வலுவலக கடித எண்: 4617/08/JN4, நாள்: 08.11.2012 மற்றும் 20.12.2012 ந் தேதிகளில் மாநகராட்சியால் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் 18 மாதங்கள் முடிவடைந்த நிலையில், ஒப்பந்ததாரர் மீண்டும் DBOT அடிப்படையில் பணிகளை துவக்கவும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளின்படி கூடுதல் கட்டுமான பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது.

ஏற்கனவே ஒப்பந்தப்பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் மீதித் தொகையான ரூ. 15.83 கோடியுடன், நீதிமன்ற தடை உத்தரவின் பேரில் பணியினை தற்காலிகமாக நான்கு வருட காலம் நிறுத்தி வைத்த காரணத்தையும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நிபந்தனைகளுடன் செய்யப்பட வேண்டிய மீதிப்பணிகளையும் கருத்தில் கொண்டு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்: 397, நாள்: 18.03.2013 – ல் உரிய திருத்திய ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்படி மாநகராட்சி தீர்மானத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது கடித எண். 2491/2013/DO1, 03.04.2013–ந் தேதிய கடிதத்தில் கூடுதல் தொகையான ரூ. 17.50 கோடியை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் கடந்த **25.10.2012–ல்** வழங்கிய ஒப்புதலுக்கு எதிராக மேற்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகில் வசிக்கும் குடியிருப்போரால் சென்னை பசுமை தீர்ப்பாயத்தால் மாநகராட்சிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மீண்டும் இடைக்கால தடை உத்தரவு (மனு எண். 32&33 / 2013) கடந்த **02.04.2013**-ல் வழங்கப்பட்டது.

மேற்படி வழக்கானது, சுமார் 4 வருடகாலம் **(2013 to 2017)** வரை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் விசாரணையில் இருந்து கடந்த **24.04.2017** அன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சாதகமாக பணியை மீண்டும் தொடர தீர்ப்பு வழங்கியது.

இதனடிப்படையில் இம்மாநகராட்சியால் மேற்படி ஒப்பந்த நிறுவனத்துக்கு பணியை மீண்டும் தொடர இவ்வலுவலக கடிதம் எண்: **4617/08/JN4**, நாள்: **02.06.2017, 19.06.2017** மற்றும் **12.08.2017** ஆகிய கடிதங்கள் வாயிலாக கோரப்பட்டது. இந்நிலையில் மாநகராட்சிக்கு சாதகமாக வழங்கப்பட்ட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மனுதாரர்களால் உச்ச நீதி மன்றத்தில் (புது டெல்லி) மாநகராட்சிக்கு எதிராக C A P No: **7659** to **7662** /**2017** –ல் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் மேற்படி மேல் முறையீட்டை ஆரம்ப நிலையிலேயே கடந்த **21.08.2017** அன்று தள்ளுபடி செய்து மாநகராட்சிக்கு சாதகமான உத்தரவு வழங்கப்பட்டது.

எனவே மீண்டும் பணிகளை உடனடியாக துவக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதில், ஒப்பந்த நிறுவனம் **01.08.2017** அன்று கடிதத்தில் கோரியதற்கிணங்க, கூடுதல் பணி மற்றும் கடந்த **8** வருட **(2009 to 2017)** காலமாக நீதிமன்ற உத்தரவின் பேரில் பணியை நிறுத்தி வைத்ததால் ஏற்பட்ட கட்டுமான பொருட்களின் விலை உயர்வின் காரணமாக பணியை முடிப்பதற்கான திருத்திய செயல் திட்ட நடவடிக்கையும் சமர்பிக்குமாறு மாநகராட்சியால் கடிதங்கள் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் ஒப்பந்த நிறுவனமான தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை, நிறுவனத்தார் நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி அறிக்கை செயல்பாட்டின்படி பணி மேற்கொண்ட போது ஒப்பந்த நிறுவனத்தின் திவால் ஆன அறிக்கையை **21.04.2017** அன்று நிறுவனத்தின் Website–ல் பிரகடனம் செய்ததால் (Under Regulation 6 of the Insolvency and Bankruptcy Board of India Insolvency Resolution process of Corporate Persons) மேற்படி நிறுவனத்தின் நிதி நிலைமை பணியை தொடர முடியாத நிலையில் உள்ளதாக தெரியவந்தது.

இந்நிலையில், மேற்படி பணியை பொது மக்கள் நலன் கருதி விரைவில் முடிக்கப்பட வேண்டிய அவசர அத்தியாவசியம் காரணமாக ஒப்பந்த நிறுவனத்தின் நிதி நிலைமையின் ஸ்திர தன்மையை உறுதி செய்ய தேவையான விவரங்களை சமர்பிக்குமாறு இவ்வலுவலக கடித எண்: **4617/08/JN4**, நாள்: **22.03.2018–ல்** கோரப்பட்டது. மேற்படி ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து இது சம்பந்தமாக எவ்வித பதில்களும் இதுவரை பெறப்படவில்லை.

எனவே, ஒப்பந்த நிறுவனத்தின் நிதிநிலைமை குறித்து மாநகராட்சியின் சென்னை உயர்நீதிமன்ற நிலை வழக்கறிஞரிடம் கடந்த **05.03.2018–ல்** சட்ட கருத்துரை கோரப்பட்டதற்கு **22.03.2018–ந்** தேதிய கடிதத்தில் இப்பணிக்கான ஒப்பந்தத்தை முற்றிலும் ஆராய்ந்து, பின்பு மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ஒப்பந்த விதிகள் **1:13**-ன் கீழ் ரத்து செய்யலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்துக்கு **ஒப்பந்தவிதிகளின்படி ஏன் அவர்களது பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கூடாது?** என்று காரணம் கேட்கும் குறிப்பாணை (Show Cause Notice) கடிதம் கடந்த **07.05.2018–ல்** மேற்படி நிறுவனம் தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பைக்கு அனுப்பப்பட்டது. நிறுவனத்தால் கடந்த **23.05.2018–ந்** தேதிய கடிதத்தில் அளிக்கப்பட்ட பதில்கள் திருப்திகரமாக இல்லாததால் பணி மேற்கொள்ளும் ஆர்வம் உண்மையில் மேற்படி நிறுவனத்திற்கு இல்லை என கருதும் சூழ்நிலை உள்ளது.

இப்பணி சம்பந்தமாக பல்வேறு வழக்குகளை சந்தித்து வெற்றி பெற்று மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்ற நிலையிலும் மேற்படி நிறுவனத்தின் பணிசெய்யும் ஆர்வமின்மையையும், நிறுவனத்தின் நிதி நிலைமையையும் கருத்திற்கொண்டு நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பணியை முடிக்க இயலாத நிலையில் உள்ளதாலும் பொதுமக்கள் அதிருப்திக்கும், மாநகராட்சிக்கு ஏற்படும் அவப்பெயரை தவிர்க்க வேண்டியும் தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டிய சூழ்நிலை எழுந்துள்ளது.

எனவே தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனத்தின் ஒப்பந்தத்தை ரத்து செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அ) ஒப்பந்த (General Conditions of Agreement Clause 1.13) விதிகளின்படி ஒப்பந்த நிறுவனம் தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனத்தின் நிதி நிலைமையை (Bankrupty) கருத்திற்கொண்டு நஞ்சுண்டாபுரம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பணியை முடிக்க இயலாத நிலையில் உள்ளதாலும் பொது மக்கள் அதிருப்திக்கும் மாநகராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயருக்கும் ஆளாகும் நிலைமையை தவிர்க்கும் பொருட்டும் தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை (M/s. Hindustan Dorr Oliver Limited, Mumbai) நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை ரத்து செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4617 /08/ஜேஎன்4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 165 நாள் 08.06.2018**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 26**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட ஆத்துபாலம் மின்மயானம் அருகிலுள்ள கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5751 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 166 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 27**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பாலக்காடு சாலையிலிருந்து புட்டுவிக்கி செல்லும் இணைப்பு சாலையில் உள்ள கால்வாயின் கரை ஓரமாக சிறந்த மரங்கள் அமைத்தல் மற்றும் சாலையில் சாலைக் கோடுகள் மற்றும் சாலை உபகரணங்கள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.50,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.50,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5471 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 167 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 28**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட நஞ்சுண்டாபுரம் கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.20,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.20,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5475 /2018/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 168 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 29**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட தெக்கலூர் ஓடை அருகிலுள்ள கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5754 /2018/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 169 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 30**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம் பகுதியிலுள்ள சாலைகளில் சாலைக் கோடுகள் மற்றும் சாலை உபகரணங்கள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.21,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.21,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 4983/2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 170 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 31**

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட காளப்பட்டி டிவிசன் அலுவலகம் அருகில் உள்ள குளத்தை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5755/2018/MD3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 171 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 32**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் பிரதான சாலை அருகிலுள்ள செங்கல் வாய்காலை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.10,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5752 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 172 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 33**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கண்ணப்பா நகர் அருகாமையில் உள்ள சங்கனூர் கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5733 /2018/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 173 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 34**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குறிச்சி குளம் அருகிலுள்ள கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5476/2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 174 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 35**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் 85-ல் உள்ள பூர்வாங்கா கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5474 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 175 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 36**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குறிச்சி பிரிவு முதல் N.P இட்டேரி வரை உள்ள கால்வாயை திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5473 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 176 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 37**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட சங்கனூர் கால்வாயில் மேட்டுப்பாளையம் சாலை முதல் கிழக்காக சண்முக கவுண்டர் நகர் அருகாமையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,90,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5472 /2018/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 177 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 38**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட செல்வபுரம் பைபாஸ் சாலையில் உள்ள கால்வாயில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூர் வாருதல் மற்றும் திடக்கழிவுகளை அகற்றுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு அரசாணை எண்.146, தேதி. 24.10.2016 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிக்கையின்படி மதிப்பீடு ரூ.9,80,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண் :- 5330 /2018/MD4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 178 நாள் 08.06.2018**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 39

கோவை மாநகராட்சியில் அம்ருட் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள எல்லை விரிவாக்கத்திற்கு முன்பிருந்த மாநகராட்சி பகுதிகளில் (Erstwhile Corporation) ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் மேறகொண்டு 24 மணி நேரமும் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு (Improving & Revamping the Existing Water Supply Scheme with continuous 24 x 7 water supply) பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership mode) ரூ. 556.57 கோடி மதிப்பில் மேற்கொள்ள, அரசாணை எண் (எம்.எஸ்) 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 27.08.2015–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாவது ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கலந்து கொண்ட நிறுவனங்களில் தகுதிபெற்ற ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் (RFP – Request for Proposal) கோரப்பட்டதில், M/s. Suez Projects Pvt. Ltd., Gurgaon, Haryana என்ற நிறுவனம் ரூ. 646.71 கோடி மதிப்பில் பணியை மேற்கொள்ள வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளி, கடந்த 23.11.2017–ல் ஒப்பந்தப்புள்ளி கூராய்வு மற்றும் மதிப்பீட்டு குழுவின் (TS&EC) ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி நிறுவனத்திற்கு Letter of Award (LOA) கடந்த 24.11.2017–ல் வழங்கப்பட்டு, 08.01.2018–ல் ஒப்பந்தம் (Concession Agreement) மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பந்த விதி எண் 20–ன்படி (Article 20 of Agreement) மேற்படி நிறுவனம் மேற்கொள்ளும் 24x7 குடிநீர் திட்ட பணிகளை நிர்வகிக்கவும், கண்காணிக்கவும் ஒரு தனிப் பொறியாளர் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் (IE cum PMC) நிறுவனத்தை தேர்வு செய்ய, தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) கடந்த 23.09.2014 –ல் நடந்திய இரண்டாவது கூட்டத்தில் பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான பணித் தொகையில் 3% என முடிவு செய்தது. அதன்படி ஒப்பந்தத் தொகை ரூ. 646.71 கோடியில், (EPC cost) 3% தொகை ரூ. 19.40 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) ஒப்புதல் வழங்கிய தொகையில் 50% சதவீத தொகையினை 24 மணி நேர குடிநீர் திட்டத்தை செயல்படுத்தும் M/s. Suez Projects Pvt. Ltd., நிறுவனமும், 50 % சதவீத தொகையினை மாநகராட்சியும் ஒப்பந்த விதி 20–ன்படி (Article 20 of Agreement) வழங்கப்பட வேண்டும்.

எனவே, கலந்தாலோசகரை நியமிப்பதற்கும் மாநகராட்சி வழங்க வேண்டிய 50 % சதவீத தொகையான ரூ. 9.70 கோடியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ அல்லது குடிநீர் நிதியிலிருந்தோ வழங்குவதற்கும் 09.02.2018 ஆணையர் மற்றும் தனிஅதிகாரி அவர்களது முன்அனுமதி பெறப்பட்டது.

தனிப் பொறியாளர் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் (IE cum PMC) நிறுவனத்தை தேர்வு செய்ய கடந்த 27.03.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1. M/s GKW Consult GmbH – Almondz (JV), Kolkata
2. M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore
3. M/s. WAPCOS Ltd, Chennai.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s GKW Consult GmbH – Almondz (JV), Kolkata மற்றும் M/s. WAPCOS Ltd, Chennai ஆகிய நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெறாததால் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டு, தகுதிபெற்ற M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப கூராய்வு மற்றும் மதிப்பீட்டு குழு (TS&EC) ஒப்புதல் பெறப்பட்டு, M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி 15.05.2018–ல் திறக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திடம் விலைகுறைப்பு கோரியதில், விலைக்குறைப்பு செய்து வழங்கிய விபரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | 24 x 7 குடிநீர் திட்டத்தினை மேற்கொள்ளும் நிறுவனத்தின் பணிகளை நிர்வகிக்கவும், கண்காணிக்கவும் ஒரு தனிப் பொறியாளர் மற்றும் திட்ட மேலாண்மை ஆலோசகர் நிறுவனம் நியமித்தல் பணி | ரூ. 20.00 கோடி | M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore | ரூ. 21,32,81,932/– | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 6.64% அதிகம் |
| | | | | முதல் விலைக்குறைப்பு நாள் 23.05.2018 ரூ. 20,99,79,141/– | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.99 % அதிகம் |
| | | | | இரண்டாவது விலைக்குறைப்பு நாள் 25.05.2018 ரூ. 20,93,99,298/– | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.70 % அதிகம் |
| | | | | மூன்றாவது விலைக்குறைப்பு நாள் 01.06.2018 ரூ. 19,48,30,049/– | விலை குறைப்புக்குப் பின்னர்ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 2.58 % குறைவு |

கோவை மாநகராட்சியின் பழைய வார்டு பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெறப்பட்ட நிர்வாக அனுமதிக்கு பின்னேற்பு வேண்டியும், விலைகுறைப்பிற்குப் பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 19,48,30,049/– (2.58% குறைவாக) வழங்கிய M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u> கோவை மாநகராட்சியின் பழைய வார்டு பகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி, முன் அனுமதி பெறப்பட்ட நிர்வாக அனுமதிக்கு பின்னேற்பும், விலைகுறைப்பிற்குப் பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 19,48,30,049/– (2.58% குறைவாக) வழங்கிய M/s InfraEn (India) Pvt. Ltd. – Zonta Infratech Pvt. Ltd., (JV) Bangalore நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 2896 / 08 / ஜே.என்5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 179 நாள் 08.06.2018</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

(ஒப்பம்) க. விஜயகார்த்திகேயன்,
ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி